பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

01 11 2024 **FRIDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள்</u>
<u>தலைப்புச் செய்திகள்</u>

1) தேர்தல் ஆதாயத்திற்காக வழங்கப்படும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது கடினம் என்பதை காங்கிரஸ் தற்போது உணர்ந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) தேசிய இளையோர் விருதுக்கு இன்று முதல், வரும் 15-ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா அறிவித்துள்ளார்.

3) சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் ஒரு லட்சத்து 87 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4) தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியா ஐந்து வெண்கலப்பதக்கங்களை வென்றது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<<>>>>>**

தேர்தல் ஆதாயத்திற்காக வழங்கப்படும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது கடினம் என்பதை காங்கிரஸ் தற்போது உணர்ந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பில் உள்ள இமாச்சலப்பிரதேசம், கர்நாடகா மற்றும் தெலங்கானா மாநிலங்களின் நிதிநிலைமை மோசமாக இருப்பதை சுட்டிக்காட்டினார்.

காங்கிரஸ் கட்சியின் இந்த அரசியல் அணுகுமுறை காரணமாக அம்மாநிலங்களின் ஏழை, இளையோர், விவசாயிகள் மற்றும் மகளிர் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டு மக்கள் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும்தான் விரும்புவதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தேசிய இளையோர் விருதுக்கு விண்ணப்பிக்க தகுதி வாய்ந்தவர்கள் இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பான காணொலி செய்தியில், வரும் 15-ஆம் தேதிவரை இந்த விருதுக்கு விண்ணப்பிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தேசிய விருதுகளுக்கான பொது இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சமூக சேவை, சுகாதாரம், மனித உரிமை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின்கீழ், 15 முதல் 29 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுவதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் ஒரு லட்சத்து 87 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இது கடந்த ஆண்டு இதே காலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில் எட்டு புள்ளி ஒன்பது சதவீதம் அதிகமாகும்.

தொடர்ந்து எட்டாவது மாதமாக வரி வருவாய் ஒரு லட்சத்து 70 ஆயிரம் கோடியை தாண்டியுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தில் அனைத்துத்தரப்பினரும் பயன்பெறும் வகையில் திமுக அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அரசு கொறடா திரு ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

இன்று உதகையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டிலேயே முன்னணி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழக வெற்றிக்கழக தலைவர் திரு விஜய், அதிகாரப்பகிர்வு குறித்து தெரிவித்த கருத்து வரவேற்கத்தக்கது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் கூட்டணி குறித்து கட்சி மேலிடம்தான் முடிவு செய்யும் என்றும் கூறினார்.

<<<<<<>>>>>

அஇஅதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் வரும் 6-ஆம் தேதி சென்னையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிற மாநிலங்களின் செயலாளர்களும் பங்கேற்குமாறு அக்கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<<>>>>>

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் கந்தசஷ்டி திருவிழாவிற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாளை தொடங்கவுள்ள இந்த திருவிழாவில் பங்கேற்பதற்காக இன்று முதலே பக்தர்கள் திருச்செந்தூரில் குவிந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - லஷ்மணன் - 47 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 62 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

சேலம் தினம் இன்று கொண்டாடப்பட்டது.

பழமையான சேலம் நகரத்தின் சிறப்புகளை கொண்டாடும் வகையில், வரலாற்று சங்கம் சார்பில், நடைபயணம் இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - விஜய்குமார் - 36 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

வேலூர் மாவட்டத்தில் முன்னாள் ராணுவத்தினருக்கான டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் பெறுவதற்கான முகாம் இன்று நடைபெற்றது.

-----------------

திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தூய்மைப்பணியாளர்கள் பட்டாசுகள், பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளிட்ட 700 டன் குப்பைகளை ஜே சி பி இயந்திரத்தின் உதவியுடன் அகற்றினார்.

---------------

தொடர் விடுமுறையை முன்னிட்டு கன்னியாகுமரிக்கு செல்லும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

---------------

தேனி மாவட்டம் கும்பக்கரை அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலாப்பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

--------------

சென்னை புறநகர் ரயில் சேவை நாளை ஞாயிற்றுக்கிழமை அட்டவணைப்படி இயங்கும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

**<<<<<<>>>>>**

***விளையாட்டுச் செய்திகள்***

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியா ஐந்து வெண்கலப்பதக்கங்களை வென்றது.

அமெரிக்காவின் ஃபுளோரிடாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 50 கிலோ எடைப்பிரிவில் ரிஷி சிங்கும், 55 கிலோ எடைப்பிரிவில் **Krrish Paul**-ம், 70 கிலோ எடைப்பிரிவில் சுமித்தும், 85 கிலோ எடைப்பிரிவில் **Aryan**-ம், 90 கிலோ எடைப்பிரிவில் **Lakshy Rathi** –ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

75 கிலோ எடைப்பிரிவில் **Rahul Kundu**-வும், 90 கிலோ எடைப்பிரிவில் **Hemanth Sangwan**-ம் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் பிரிவில் சுப்ரியா தேவி, அஞ்சலி தேவி, நிஷா, **Veni, Chanchal, Akansha, Krisha Varma, Kritika Wasan, Vanishika Goswami, Parthavi Grewal** ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

------------

நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 86 ரன் எடுத்துள்ளது.

மும்பையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், சுப்மன் கில் 31 ரன்னுடனும், ரிஷப் பந்த் ஒரு ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக, டாஸ் வென்று முதலில் பேட் செய்த நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 235 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக **Daryl Mitchell** 82 ரன் எடுத்தார்.

ஜடேஜா ஐந்து விக்கெட்டுகளையும், வாஷிங்டன் சுந்தர் நான்கு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

--------------

ஆஸ்திரேலியா “ஏ” அணிக்கு எதிரான, முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று இந்தியா “ஏ” ஆட்டநேர இறுதியில் இரண்டு விக்கெட் இழப்பிற்கு 208 ரன் எடுத்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் **Mackay**-யில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் ஆஸ்திரேலியா “ஏ” அணி முதல் இன்னிங்சில் 195 ரன்னுக்கும், இந்தியா “ஏ” முதல் இன்னிங்சில் 107 ரன்னுக்கும் ஆட்டமிழந்தன.

-------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

------

கஜகஸ்தானில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Koneru Humpy - Divya Deshmukh** இடையேயான இரண்டாவது சுற்று ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

**<<<<<<END>>>>>>**